# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

30-10-66

விலை 20 காசு

ராபர்ட் கென்னடி

# கேள்வி--பதில்!

1. இந்திய இரயில்கள் மிக அதிகமாகத் தடம் புரண்டுப் போகின்றனவே, ஏன்?

*இந்திய அரசே பல பாதைகளில் தடம் புரண்டு கிடப்பதால் என்று கூறவேண்டும் என எதிர்பார்க்கிறீரா நீர்?*

2. நிலவரி ஒழிப்பு மசோதா எந்தக் கட்டத்திலிருக்கிறது?

*இது விஷயமாக மசோதா தயாரிக்கும் கட்டத்துக்கு தமிழக அரசு வந்துவிட்டதாகக் கூறுவது சரியல்ல என்று முதலமைச்சரே கூறியிருக்கிறாரே, கவனிக்கவில்லையா நீங்கள்?*

3. நாணய மதிப்புக் குறைப்புக்குப்பின், இந்தியப் பொருளாதார நிலை சரிப்படுத்தப்பட்டுவிட்டதா?

*ஐயோ பாவம்! சரியான மருத்துவ வசதிகள் ஏதும் இல்லாமலேயே அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட நோயாளியைப் பற்றிக் கேட்டால், பிழைப்பான் என்பதற்கு உத்திரவாதம் எப்படித் தரமுடியும் மே. ஜெர்மனி பொருளாதார நிபுணர் டாக்டர் மாக்ஸ் ஸ்பாண்டா என்பவர் இது பற்றி, அண்மையில் கல்கத்தாவில் கருத்தறிவித்திருக்கிறார், செய்தியாளர்கள் கூட்டத்தில் அவர் சொல்கிறார்: பாங்காக் நகரிலிருந்து பெர்லின் வரை, எங்கு சென்றாலும் இந்தியாவின் நாணய நடவடிக்கை பற்றிக் கைகொட்டிச் சிரிக்கிறார்கள் என்று. சரியான நடவடிக்கைகளைச் சட்ட ரீதியாக ஏற்பாடு செய்துகொண்டுதான் நாணய மதிப்பைக் குறைத்திருக்கவேண்டும் என்பது அவர் கருத்து. இந்திய அரசின் கொள்கையினால் தான், திட்டம் வெற்றி பெற முடியாத நிலையிலிருக்கிறது எனவும் அவர் சொல்கிறார். இந்திய அரசோ, தங்கள் ஆட்சிக்காலமே இந்தியாவின் பொற்காலம் என்று சொல்லத் தொடங்கிவிட்டது; காங்கிரசைத் தவிர யாரும் இப்படி ஆளமுடியாது என்பது உண்மைதானே!*

4. இந்தோனேஷிய முன்னாள் அமைச்சர் சுபாந்திரியோ மீது நடைபெற்ற வழக்குக்கு முடிவு கூறப்பட்டுவிட்டதா?

*ஆமாம்! மரண தண்டனை விதித்து இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கிறது; உயிரைப் பறித்துக் கொள்ளும் அல்லது பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை ஜனாதிபதியிடம் விட்டிருக்கிறது அந்நீதிமன்றம்.*

5. இந்த நாட்டுக்கு எப்படிப்பட்ட எதிர்க்கட்சி வேண்டுமென காங்கிரஸ் எதிர்பார்க்கிறது?

*சென்னை மாநகராட்சியில் இப்போதிருக்கும் எதிர்க்கட்சியைப் போலவே இருக்கவேண்டுமென விரும்புகிறதோ என்னவோ?*

6. இந்திய அரசுக் கணக்குப்படி, மக்கள் தொகை உயர்வுசதவீதத்தைவிட, உணவு உற்பத்தி சதவீதம் அதிகமாகத்தானே காணப்படுகிறது; இருந்தும் பற்றாக்குறை என்கிறார்களே ஏன்?

உணவுப் பொருள்கள் விநியோகத்தில் அரசு போதிய திறமையாகச் செயல்படாமைதான் இத்தகு நெருக்கடிகளுக்குக் காரணம் என்று, பல அறிவாளர்கள் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

7. வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகள், ஆர்ப்பாட்டங்கள் வாயிலாக சர்க்காரை மாற்ற முடியாது, தேர்தலில் ஆளும் கட்சியை முறியடிப்பதன்மூலமே மாற்ற முடியும் என்கிறாரே, அமைச்சர் பாட்டீல், கவனித்தீர்களா?

*கவனித்தேன்! சரியான நேரத்தில் சரியான முறையை சொல்ல வேண்டியவர் சொல்லி இருக்கிறார்; இனி உங்கள் பொறுப்பு என்றுதான் நான் சொல்ல முடியும்!*

8. இந்திய வானொலி நிலையங்கள்இயங்கும் தன்மைபற்றி உங்கள் கருத்தென்ன?

*அது இயங்குகிறது என்று நீங்கள் கூறுகிறீர்கள், நான் எப்படிக் கருததுக் கூறமுடியும்? வற்புறுத்திக் கேட்டால், அது வெளிப்படையாகவே காங்கிரஸ் கதா காலட்சேபம் நடத்திக் கொண்டிருக்கிறது என்று கூறலாம்!*

9. ஒரிசா குழப்பங்கள் நீங்கி அங்கு அமைதியும் ஒழுங்கும் ஏற்படுத்தப்பட்டுவிட்டது, காமராசருக்கு வெற்றிதானே?

*வெற்றியா! 'காங்கிரஸ் நிறுவனத்துக்கு பெரிய நஷ்டத்துடன் இலாகா மாற்றங்கள் நீக்கப்பட்டுள்ளன' என்கிறார் ஒரிசா துணை முதலமைச்சர் நீலமணி ரவுத்ராய். இது குறித்து செய்தியாளர் ஒருவர் முதல்வர் திரிபாதியிடம், 'இலாகாதொடர்பான அரசியல நிர்ப்பந்தங்களுக்குப் பணியமாட்டேன் என்றீர்களே; இப்போது பணிந்துவிட்டீர்களே' என்று கேட்டதற்கு, 'கட்சித்தலைவரின் கட்டாயத்தை நான் ஏற்கவேண்டி நேரிட்டது' என்கிறார். கூர்ந்து கவனித்தால், ஒரிசா மக்கள் அளிக்கப்போகும் தீர்ப்பு, காமராசருக்கு வெற்றியாக இருக்கமுடியாது.*

10. முத்தரப்பு மாநாட்டுக்கு வந்த டிட்டோ, சீனாவை, ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ள முயல வேண்டும் என்பது தவிர, மற்ற பிரச்னைகள் தொடர்பாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை என்றதன் பொருள் என்ன?

ஒருவனை நண்பனாக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக, இன்னொருவனைப் பகைத்துக்கொள்ளவேண்டும் என்ற தத்துவத்தை அவர் ஒப்புக் கொள்ளாததனால் தான் அப்படிச் சொன்னாரோ, என்னவோ!

11. சீனாவை, ஐ. நா.வில் உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுவது எதனால் என்று விளக்குவீர்களா?

'தன் நாடு, தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது' — என்ற உணர்வை யகற்றிவிட்டால், சீனா தன் போக்கில் மாறுதல் ஏற்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு உண்டு என்று அதிபர் நாசர் கருதுகிறார். சில நாடுகள், ஐ. நா. அவை மூலம், அதனைத் தட்டிக்

(8-ம் பக்கம் பார்க்க)

**சொல்லாமை நன்று!**

கருத்துக்களைக் கூறும்போது, அது பயனுடையதாவென ஆராய்ந்தே கூறவேண்டும்; பயனற்ற கருத்துக்களை கூறுவதனால், எந்த பயனும் விளையாதாகையால், அதனைச் சொல்லாதிருப்பதே நல்லதாகும். —திருக்குறள்.


# காஞ்சி

மலர் 8 30—10—66 இதழ் 14


# உண்டா? இல்லையா?

சேலம் உருக்காலைத் திட்டம் ஒரு சோகத் தொடர்கதையாகிவிட்டதை எண்ணி, தமிழகம் வருந்தித் தீரவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப் பட்டிருக்கிறது.

உருக்காலைக்கான வழிவகைகளை, மூன்றாவது திட்டத்திலேயே செய்யப்பட்டுள்ளதாக, அத்திட்டத்தைப் பிரசுரித்தபோதே திட்டக் குழுவினரும், இது தொடர்பானவர்களும் அறிவித்தார்கள்.

திட்டக்காலத்தில், எதிர்பாராமல் ஏற்பட்ட மானங்காக்கும் போராட்டம் காரணமாக பல செயற்பாடுகள் தள்ளிவைக்கப்பட நேர்ந்ததில் சேலமும் சேர்ந்ததாக அறிவிக்கப்பட்டது. திட்ட இறுதியிலோ பொருளாதாரத் தொய்வு காரணமாக சேலம் திட்டம் முடங்கியது எனக் கூறப்பட்டது.

நாலாம் திட்டத்தின் நகல் பிரசுரிக்கப்பட்ட போது-பிரம்மாண்டமான அளவில் 23,750 கோடிக்கு அறிவிக்கப்பட்டபோது, பொருளாதாரத் தொய்வு நீங்கிவிட்டது—பூதாகாரமான அளவுக்கு வெளியிடப்பட்டுள்ளது—இதிலாவது சேலத்துக்கு உயிர்கொடுக்கலாம் எனத் தமிழகம் நம்பியதில் வியப்பில்லை.

என்றாலும், திட்டத்தை எழுத்துக்கு எழுத்து படித்துப் பார்த்த தமிழகம் பெருமூச்சை உகுத்து, சோகக்கண்ணீரும் வடிக்கத் தொடங்கியது.

துரதிருஷ்டவசமாக 4ம் திட்டக்காலம், பொதுத் தேர்தலை அடக்கியிருக்கும் காலமாக இருப்பது கண்டு பல காங்கிரசாரே கலங்கிப் போனார்கள்.

> “இப்படியான அறிவிப்புக்களை பொதுத் தேர்தலுக்குப்பின்னராவது வெளியிடக்கூடாதா?”

என்றுகூட தமிழக முதலமைச்சர் மனம் நொந்து கூறியதாக ஏடுகள் செய்தி வெளியிட்டிருந்தன.

சஞ்சீவி மலையைக் கொண்டுவரச் சென்ற அனுமன்போல், கனம் பக்தவத்சலம் அவர்கள், தனியானதொரு பயணத்தை மேற்கொண்டு டில்லி சென்று, திரும்பினார் இதற்காக!

எர்ணாகுளத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், இந்தியப் பிரதமர் ‘பொருளாதாரச் சூழல் செம்மைப்படுமானால், சேலம்பற்றி யோசிக்கலாம்’ என்று கருத்தறிவிக்கவும் செய்தார்.

என்பன போன்ற பழைய வரலாற்றை—சேலம் உருக்காலை விஷயத்தில் தமிழகத்தின் உணர்ச்சி எத்தன்மையதாயிருக்கிறது என்பதற்கான விளக்கத்தை—மீண்டும் தமிழ்நாடு, தன் மனக்கண்ணில் கொண்டு வந்து நிறுத்தவேண்டிய சம்பவங்கள் அடுக்கடுக்காக நடைபெற்றுக்கொண்டே வருகின்றன.

ஒரு பொதுத்தேர்தலை நடத்தித் தீரவேண்டிய கட்டாயத்தில் பிணையுண்டுள்ள காங்கிரஸ் அரசு, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், தன் எதிர்காலத்தை எத்துணைப் பய உணர்வோடு — கலங்கிய கண்கொண்டு காணத் தொடங்கி இருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகத்தான் சேலம் உருக்காலைத் திட்டம் யானை வாய்ப்பட்ட கரும்பாகி இருக்கிறது.

உருக்காலைபற்றிய முடிவில், மத்திய அரசைப் பொறுத்தமட்டில் திட்டவட்டமான முடிவுக்கு வந்தாகிவிட்டது என்பது வெளிப்படை. அந்த முடிவைத்தான் 4-ம் திட்ட நகல் அறிவிக்கிறது.

ஆயினும், தமிழக அமைச்சர்கள் இதுபற்றி வாய் பொத்திக்கிடக்கும் சூழ்நிலையை தமிழ் நாட்டு மக்கள் ஏற்படுத்திவைக்கவில்லை. எதையாவது ஆசை வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும் என்ற நெருக்கடி நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளனர்.

போதாக்குறைக்கு இரு கிழமைகளுக்கு முன், சேலம்—தர்மபுரி மாவட்ட வணிகச் சங்கத்தின் சார்பில் டில்லிமாநகருக்கு ஒரு தூதுக்குழு சென்று ‘சேலம் உருக்காலை’ கோரி, திட்டக் குழுவையும் சந்தித்திருக்கிறது; காங்கிரசுத் தலைவர் காமராசரையும் சந்தித்துக் கேட்டிருக்கிறது.

> “சேலம் திட்டம் இல்லையென்பதில்லை; அதற்கான வழிவகை 3-ம் திட்டத்திலேயே செய்யப்பட்டுள்ளது; பொருளாதார நெருக்கடி குறைந்ததும் மீண்டும் இதுபற்றிக் கவனிக்கப்படும்.”

—என்ற அரிய தத்துவ விளக்கத்தை திட்டக்குழு அளித்து, தூதுக்குழுவை சமாதானம் செய்திருக்கிறது.

அந்த சமாதானத்தோடு, தலைமை அமைச்சரைக் கண்ட குழுவினர், ஆழ்ந்த அனுதாபத்தையும் சிந்தனையையும்”—பெற்றிருக்கிறார்கள்.

இதே அனுதாபத்துடன், காமராசரைக் கண்டபோதில்தான் குழுவினரது முகம் மலரத்தக்க செய்தி கிடைத்திருக்கிறது.

> “4-ம் திட்டத்தில் சேலம் உருக்காலை அமைவது உறுதியிலும் உறுதி”

என்ற உத்திரவாதத்தையளித்திருக்கிறார் காமராசர்.

இத்தூதுக்குழுபற்றிய எல்லா விவரங்களையும் ‘இந்து’ இதழின் புதுடில்லிச் செய்தியாளர் கடந்த 16-ம் நாள் தன் இதழில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இது பிரசுரமான இருநாட்களில் ‘மெயில்’ இதழின் புதுடில்லிச் செய்தியாளர், இந்து இதழின் செய்தியில் காணப்படும்—

> ‘உருக்காலை அமைவது உறுதியிலும் உறுதி’

என்ற காமராசரது உத்திரவாதத்தைக்கண்டு திட்டக்குழு, ‘வியப்படைந்திருக்கிறது’ — என்று செய்தி தருகிறார்.

**வியப்படைந்திருக்கிறது** என்ற சொல்மூலம் காமராசரது உத்திரவாதம் தூக்கி எறியப்படுகிறது

என்று பொருள்கொள்ளமுடியும் என்றாலும், திட்டக்குழு மேத்தா, தூதுக்குழுவிடம், 'நிதி வசதியைப் பொறுத்து மேற்கொண்டு கவனிக்கலாம்' என்று மட்டுமே கூறியிருக்க, 'உறுதியிலும் உறுதி' என்று காமராசர் கூறியிருக்கிறார் என்றால், அவர் ஏதேனும் தனித்திட்டம் வைத்திருக்கிறாரா? — என்று எண்ணிகூட மேத்தா, வியப்படைந்திருக்கலாம்.

அல்லாமல், தங்கள் கருத்து திரிக்கப்படுகிறது என்றும் வியப்படைந்திருக்கலாம்.

இப்படியொரு பெருவியப்பைத் திட்டக்குழுவும் மேத்தாவும் கொண்டுள்ள வேளையிலேதான், தமிழகத்தில் முதலமைச்சரும், தொழிலமைச்சரும் சேலத்திற்கு இருப்பாலை உண்டு என்று அடுத்தடுத்துக் கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

நமக்கெழுகின்ற ஐயம், திட்டக்குழுவானாலும் சரி, முதலமைச்சரோ, தொழிலமைச்சரோ ஆனாலும் சரி, அவர்களையெல்லாம் அமைச்சராக ஆக்கும் சர்வ வல்லமை பொருந்தியவர் என்று கூறப்படும் காமராசரே ஆனாலும் சரி,

**சேலத்திற்கு உருக்காலை உண்டா? இல்லையா? என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து விடவேண்டும், அரசுச் சார்பில்.**

**அதுவும், ஆளும் யோக்கியதை தங்களுக்கு மட்டுமே உண்டு என்று நாப்பறைதட்டி, மக்களின் வாக்குகளைக் கவரத் தொடங்கு முன்னதாகத் தேவை.**

**அத்துடன், எப்போது? எவ்வடிவில் கிட்டும் என்பதற்கும் தெளிவான விளக்கம் தேவை.**

இல்லையென்றால், 'இல்லை, கிடைக்காது' என்பதையாவது தேர்தலுக்கு முன்பாகவே அறிவித்து விடவேண்டும்;

அல்லாமல், 'நாளை வதுவை மணமென்று நம்பி' நடமாடும் நங்கைபோன்ற நிலைமையைத் தமிழகத்துக்குத் தருவதானால் 1967-ல் தமிழ்மக்களின் தீர்ப்பு திட்டவட்டமாக இருக்கும்; காங்கிரஸ் நிறுவனத்துக்கு அது முடிபாக இருக்கும் என்பதை காமராசர் முதல், முதலமைச்சர், தொழிலமைச்சர்வரை, திட்டக் குழுவுக்கும் சேர்த்தே அறிவித்துக்கொள்கிறோம். ●

---

முகப்பில்...

# புதிய நட்சத்திரம்!

அடிலாய் ஸ்டீவென்சன் என்றும் அம்ப்ரோ என்றும் பேசிக்கொண்டிருந்த அமெரிக்க சனநாயகக் கட்சியினர் இப்போது 'ராபர்ட் கென்னடி' என்ற ஒரே பெயரைத்தான் உச்சரிக்கின்றனர்.

இளமைத் துடிப்பும் கூச்ச உணர்வும் குறுகிய காலத்தில் நிறைந்த அனுபவமும் பெற்ற 'ராபர்ட் கென்னடி' அடுத்த தேர்தலில் ஜான்சனுக்குப் பதில் வரக்கூடிய ஒரே மாற்று மனிதர் என்று நம்பப்படுகிறார்.

அமெரிக்க அரசியலின் உயர் பதவியில் கென்னடியின் மறைவுடன் அறுபட்டுப்போன தொடர்பை அண்மையில் ராபர்ட் கென்னடி புதுப்பித்துவிடலாம் என்பதற்கான அறிகுறிகள் நிரம்பத்தென்படுகின்றன.

சட்டப்படிப்பை முடித்த சீக்கிரத்தில் அரசியலுக்கு வந்துள்ள ராபர்ட் கென்னடி இப்போது நாற்பது வயதைக் கடந்துகொண்டிருக்கிறார். புகைப்படங்களில் பார்த்துவிட்டுக் கல்லூரி மாணவனைப்போல் இருக்கிறாரே என்று கருதியவர்கள் இன்னும் சில நாட்களில் இவருக்குப் பத்தாவது குழந்தை பிறக்கப் போகிறது என்பதனை அறிய ஆச்சரியப்படவே செய்வர்.

அமெரிக்க அதிபராக இவர் வந்தால் அந்த நாட்டு அரசியல் வரலாற்றில் செல்லப் பெயரைக்கொண்ட முதல் தலைவர் இவராகவே இருப்பார். ஜான்சன் எல். பி. ஜே என்று அழைக்கப்படுகிறார். மறைந்த கென்னடி ஜே. எப். கே. என்று விளிக்கப்பட்டார். ஆனால் இந்த கென்னடியோ 'பாபி' (Bobby) என்று அனைவராலும் பேசவும் எழுதவும் படுகிறார்.

அமெரிக்க மக்களிடையே இவரது செல்வாக்கு கட்சி வரம்புகளையும் மீறி நாளுக்குநாள் வளர்ந்தும் உயர்ந்தும் வருகிறது. அண்மையில் நியூயார்க் நகருக்கருகில் அதிபர்ஜான்சன் பேசிக்கொண்டிருக்கும்போது அங்கே கென்னடி தோன்றியதைக் கண்டு ஆரவாரித்த மக்கள் கூட்டத்தை அரசியல் பார்வையாளர்கள் ஆழ்ந்த தொலைநோக்குடன் கணக்கிடுகிறார்கள்.

தேர்தலில் புதிய யுக்திகளைக் கையாளுவதில் சமர்த்தர் என்று பெயர்பெற்றுவரும் ராபர்ட்கென்னடி தான் தனது தமையனின் தேர்தல் அலுவல்களையும் கவனித்தார்.

அடுத்து வரவிருக்கும் அதிபர்பதவிக்கான கட்சித் தேர்தலில் ஜான்சன் மீண்டும் பதவிக்கு மனுச் செய்தால்.....? என்ற கேள்விமட்டும் தொடர்ந்து இருந்து வருகிறது. ஜான்சனுக்கும் கென்னடிக்கும் போட்டி என்ற நிலை வந்தாலும்கூட ஜனநாயகக் கட்சியின் பெரும்பகுதி ஆதரவு கென்னடியின் பக்கம் என்பதை பத்திரிகைகளும் அரசியல் பார்வையாளர்களும் இப்போதுமுதலே தெரிவித்துவருகின்றனர்.

ஆனால் தனக்கு இருக்கும் நம்பிக்கையான எதிர்காலத்தையும் கருத்து ஆதரவையும் கென்னடி எந்த வகையிலும் தவறாகப் பயன்படுத்தவோ பதட்டத்தில் கைநழுவவோ விட்டுவிடவில்லை.

"சிலவற்றைப்பற்றி நான் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அதிபர் பதவிக்கு வந்து செய்ய வேண்டிய காரியங்களை உரியமுறையில் செய்யவேண்டுமென்பது அவற்றில் முக்கியமான ஒன்று" என்று கூறும் கென்னடி ஜான்சனுடன் எவ்வித கசப்பு உறவு முறைகளையும் மேற்கொள்ளத் துணிவதில்லை — எத்தனையோ ஆழ்ந்த கருத்து வேறுபாடுகளுக்கிடையிலும்.

தனக்கு இருக்கும் அரசியல் வலிவையும் ஆட்சி பலத்தையும் தவறாகப் பயன்படுத்தமாட்டார் என்று கருதப்படும் கென்னடி நடப்பு நிலைகளில் அடிப்படை மாற்றங்கள் மட்டும் இல்லையென்றால் 1968ல் இல்லையேல் 1972ல் அமெரிக்க அதிபராவார் என்று உறுதியுடன் நம்பப்படுகிறது.

மறைந்த கென்னடி பதவிக்கு வந்தபோது அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவர் மேற்கு வானில் புதிய நட்சத்திரம் என்ற அடைமொழியை அவருக்கு அளித்தார்.

தற்போது செனட் சபை உறுப்பினராகயிருக்கும் ராபர்ட் கென்னடி அதேவரிசையில் மேலும் ஒரு புதிய நட்சத்திரமாக மின்னுவார் என்பதை அரசியல் உலகம் எதிர்பார்க்கிறது.

-எஸ். ஆர்.

# தம்பி

## எல்லாம் தருமத்துக்கு!

எங்கோ படித்ததாக நினைவு; நகைச்சுவைக்காக எழுதப்பட்டதுதான்; என்றாலும் நான் கூற நினைக்கும் பிரச்சினைக்குப் பொருத்தமாக அமைந்திருப்பதால அதனைச் சொல்லுகிறேன்.

ஒரு சீமான்; பிள்ளை குட்டிகள் இல்லை; பெரிய சொத்து! இவ்வளவு சொத்தும் யாருக்குப் போய்ச் சேரப்போகிறதோ, யார் அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்களாக இருக்கிறார்களோ என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

ஒருநாள் அந்தச் சீமான் பத்திரிகை நிருபரிடம் சொன்னார்

என் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன்

என்று.

துள்ளிக் குதித்தோடினார் நிருபர், இதழகத்துக்கு; கொட்டை எழுத்தில் செய்தியை வெளியிட்டார்; இன்ன சீமான் தன் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்து விட்டார் என்று.

சீமானின் படம், புன்னகைபூத்த முகத்துடன்!

பாராட்டுக் குறிப்பு அவருடைய இயல்பை மெச்சி.

மற்ற இதழ் நிருபர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பைத் தட்டிப் பறித்துக்கொண்டாரே இந்த நிருபர் என்று அவருக்குப் பாராட்டு!

இவ்வளவு பரபரப்பு மூண்டுவிட்டது. மற்ற நிருபர்கள் சீமானை மொய்க்கத் தொடங்கினார்கள், விவரம் கேட்டறிய. என்னென்ன தரும காரியத்துக்குச் சொத்தை எழுதி வைத்திருக்கிறார்? சிவன் கோயிலுக்கு எவ்வளவு? மடத்துக்கு எவ்வளவு? பஜனைக் கூடத்துக்கு என்ன சொத்து? பள்ளிக்கூடத்துக்காக ஏதாகிலும் உண்டா? அனாதைப் பிள்ளைகளுக்காக?—என்று இப்படிக் கேள்விகள் அடுக்கடுக்காக!

சீமான், கேள்விக்கணைகளைத் தொடுத்தவர்களைப் பார்த்த பார்வையில், ஒரு திகைப்பே இருந்தது.

என்ன கேட்கிறீர்கள்? இதெல்லாம் என்ன கேள்வி? என்று கேட்டார் சீமான்.

"தொல்லை கொடுப்பதாகக் கருதக்கூடாது. ஊரே எதிர்பார்க்கிறது விவரம் அறிய. அதனால்தான் கேட்கிறோம்" என்றார் நிருபர்.

என்ன விவரம்?—என்று கேட்டார் சீமான்.

"தாங்கள் தங்கள் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்திருக்கிறீர்களே, அதற்கான விவரத்தைத்தான்" என்றார்கள் நிருபர்கள்.

ஒரு வெடிச் சிரிப்பு கிளம்பிற்று சீமானிடமிருந்து. "அட இழவே! நான் சொன்னதைத் தப்பர்த்தம் செய்துகொண்டீர்கள் என்றல்லவா தோன்றுகிறது. ஐயா! நான் என் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்துவிட்டேன் என்றேன். உடனே உங்களுக்குக் கோயில் குளம், சத்திரம் சாவடி, இவைகளின் மீது கவனம் போயிற்று; நான்



# அவரே சொன்னார்; அப்படித்தானே?

அந்தத் தருமத்தைச் சொல்லவில்லை ஐயா! சொத்து முழுவதையும் என் பங்காளிகள் ஏதாகிலும் பிற்காலத்திலே பற்றிக்கொள்ளக் கிளம்புவார்களோ என்ற, பயத்தில், இப்போதே என் மனைவி பேருக்கு எழுதி வைத்துவிட்டேன். அதைத்தான் நான் சொன்னேன், சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்து விட்டேன் என்று. என் மனைவி பெயர் தர்மாம்பாள்—செல்லமாக தருமு! தருமு! என்று அழைப்பேன்! அதனால் சொத்து அவ்வளவும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று சொன்னேன் என்றார், நிருபர்கள் திணறிப் போயினர்! விஷயம் இப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்க்காமல, சீமானை, வள்ளல் என்றும் தருமவான் என்றும் ஏகப்பட்ட தூக்கு தூக்கிவிட்டோமே! ஆசாமி நம்மைப் பைத்யக்காரராக்கிவிட்டாரே என்று எண்ணி வெட்கப்பட்டனர்.

> தருமாம்பாளுக்கு என்று சொல்வதற்குப் பதிலாக தருமத்துக்கு என்று சொன்னதால் இத்தனை விபரீதமான அர்த்தம் எழும்பிவிட்டது.

இந்தக் கதைதான் தம்பி! நினைவிற்கு வருகிறது காங்கிரஸ் கட்சி இப்போது பேசிக்கொண்டு வரும் பேச்சைக் கேட்கும்போது.

மறை பொருள்
இரு பொருள்
குறை பொருள்

இந்த முறையிலே கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி அவாகள் பேசுவதால், முழுப் பொருளை, உண்மைப் பொர்ருளை அறிந்து கொள்ளாதவர்கள், மயங்குகின்றனர்; வேறு விதமான பொருள் கொள்ளுகின்றனர்.

> இதனைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைகிறது காங்கிரஸ் கட்சி.

இந்த விதமான 'இருபொருள்' தரும் பேச்சை ஒரு பொறுப்புள்ள கட்சி பேசுவதை ஜனநாயகத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற நாட்டினர் ஏற்கமாட்டார்கள். இங்கு?

தேள் கொட்டிற்று
தேனுக இனித்தது

என்று பேசிடக்கூட அவர்கள் துணிவு பெறுகிறார்கள். என்ன விபரீதமான பேச்சய்யா இது!-என்று கேட்டிடினோ, புருவத்தை நெறித்தபடி கேட்கவும் முனைகின்றனர்,

தேள் கொட்டாதா?
தேன் இனிக்காதா?—என்று.

வேடிக்கைக்காகச் சொல்லுகிறேன் என்றோ, அவர்களிடம் பகை உணர்ச்சி கொண்டதால் அவ்விதம் பேசுகிறேன் என்றோ எண்ணிக் கொள்வர். அவ்விதம் நான் பேசுபவன் அல்ல.

தீவிரத் திட்டம்
அதிதீவிரத் திட்டம்
புரட்சித் திட்டம்
புதுமைத் திட்டம்
பொதுஉடைமைத் திட்டம்

என்றெல்லாம் பாராட்டினர் பலர், சீமான் தன் சொத்து அவ்வளவையும் தருமத்துக்கு எழுதிவைத்து விட்டதாகச் சொன்ன உடன பாராட்டியதுபோல.

எப்போது கிடைத்தது அந்தப் பாராட்டு?

காங்கிரஸ் எர்ணாகுளத்தில் கூடி, நாட்டிலுள்ள பாங்க்குகளை (Bank) இனி சர்க்கார் உடைமையாக்கிக் கொள்ளும் என்ற கருத்துப்பட, ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதனை தேர்தல் அறிக்கையிலே இணைத்த போது.

பாங்க்குகளை (Bank) தேசீய உடைமை ஆக்க வேண்டும்; இன்று இந்த அமைப்புகள் முதலாளிகளின் ஆதிக்கத்தை வளர்க்கும் கருவிகளாக உள்ளன; உண்மையான நாட்டு முன்னேற்றத்துக்கு, மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுவதில்லை; முதலாளிகள் மேலும் மேலும் தங்கள் தொழில்களைப் பெருக்கிக் கொளவதற்கே பயன்பட்டு விடுகின்றன, என்ற கருத்து பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

துவக்கத்திலே இந்தக் கருத்தைத் துடுக்குத்தனம் என்றும், பொருளாதாரச் சீர்குலைவு உண்டா"க்க வல்லது என்றும், தனிநபர் உரிமையைத் தகர்த்துவிடுவது என்றும் கூறித் தாக்கினர் காங்கிரஸ் அரசினர்.

> விவரம் அறியாதார் பேச்சு என்றும் வீண் குழப்பம்! மனப் பிராந்தி என்றும் கூறினர்; கண்டித்தனர்.

ஆனால் இந்தக் கருத்து மக்களாலே வரவேற்கப்பட்டு, வலிவு பெற்றது.

இந்தக் கருத்தினைக் கூறி, மக்களைத் தம் பக்கம் முற்போக்குக் கட்சிகள் இழுத்துக்கொண்டு விடுமோ என்ற அச்சம் ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டது.

அதனால்தான் ஆளவந்தார்கள், மக்களை மயக்கிட. பாங்க்குகளை தேசிய உடைமை ஆக்கத் திட்டமிட்டு விட்டிருப்பதாக அறிவித்தனர்.

> எர்ணாகுளத்தில் இந்தப் பேச்சு திட்ட வடிவம் கொண்டது; ஆனால் அதற்கு முன்பே தமிழகத்தில் 'நிலை அறிய'ச் சுற்றுப் பயணம் நடத்திய முன்னாள் நிதி அமைச்சர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அழுத்தந் திருத்தமாகக் கூறினார் பாங்க்குகள் தேசீய உடைமைகளாக்கப்பட வேண்டும் என்று.

அவர் சொன்னதன் விளைவுதான் எர்ணாகுளத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்று கருத இடம் இருந்தது. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், பொருளாதாரத் துறையிலே புலி! நிதி அமைச்சராக ஒரு முறைக்கு இரு முறை வேலை பார்த்தவர்; வித்தகா என்று பாராட்டப் பட்டவர்; அவர் கூறுகிறார் பாங்க்குகள் தேசிய உடைமையாக்கப்பட வேண்டும் என்று.

காங்கிரசின் நடுநாயகர் அவர்!

பொருளாதாரத் துறையிலே நிபுணர் அவர்!

# ஓட்டும் வேண்டும்; நோட்டும் வேண்டுமே!

அவரே கூறிவிட்ட பிறகு, அது பற்றி ஐயப்பாடு கொள்ளப் போமோ! பாங்க்குகளைத் தேசிய உடைமை ஆக்கினால், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும் என்ற அச்சத்தைக் கிளப்பிடுவோர் இனி வாய் மூடிக் கொள்வர்! என்று காங்கிரஸ் பேச்சாளர்கள் விளக்கமளித்தனர்.

இதனை விடத் தீவிரமான திட்டம் வேறு இருக்க முடியுமா?

இதைப்போன்ற புரட்சிகரமான திட்டத்தைக் காட்டிலும் வேறு என்ன திட்டம் காட்ட முடியும் எதிர்க்கட்சிகளால்!

என்றெல்லாம் எக்காளமிட்டனர்.

தம்பி! நம்மைப்போல விளக்கம்வேண்டும், இரு பொருள் கூடாது என்று கருதுபவர்கள், எர்ணாகுளத்துத் தீர்மானத்தில் பாங்க்குகளை தேசிய உடைமை ஆக்கிவிடப் போகிறோம் என்று திட்டவட்டமாகக் கூறக்காணோமே என்று கேட்டபோது, சீறி விழுந்தனர் ஆளுங் கட்சிச் சிலர்கள். ஏடா! மூடா! தேசிய உடைமை ஆக்குவோம் என்று இவ்வளவு வெளிப் படையாகச் சொன்னால்தானா — ஏன்!—கோடிட்டுக் காட்டினால் போதாதா?

**Social Control**

**சமுதாயக் கட்டுப்பாடு**

என்று கூறியிருக்கிறோமே, அதன் பொருள் என்ன என்று அறிந்துகொள்ளக்கூடவா முடியவில்லை. அத்தனை மந்தமதியா?—என்றெல்லாம் பேசிக் கேலிசெய்தனர்.

Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்பதற்கும் Nationalisation சர்க்கார் உடைமையாக்குவது என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? நிரம்ப!!

அதனைச் சிலர் எடுத்துக்காட்டியபோதுகூட, மறுத்தனர் இந்த மகானுபாவர்கள்.

பாங்க்குகளை தேசிய உடைமை ஆக்கவேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டிருக்கும் கிருஷ்ணமேனன் Social Control சமுதாய கட்டுப்பாடு என்பதற்கு உண்மையான பொருள், நடைமுறைப் பொருள் Nationalisation தேசிய உடைமை ஆக்குவது என்பது தான் என்று விளக்கம் கூறினார்.

அப்போதுகூட ஆளவந்தார்கள் இல்லை! இல்லை! நாங்கள் கூறும் சமுதாயக் கட்டுப்பாடுவேறு, தேசிய உடைமையை ஆக்குவது என்பதுவேறு என்று அறிவிக்கவில்லை.

சொத்து அவ்வளவும் தருமத்துக்குத் தான் என்று கூறிய சீமான்போல இருந்து விட்டனர்.

ஏழை எளியோர்களின் செவிகளுக்கு பாங்க்குகள் சர்க்கார் உடைமை ஆக்கப்படும் என்ற பேச்சு இசையாக அல்லவா இருந்திடும். இனிப்பு கொஞ்சமா! மன மயக்கம் ஏற்படுமல்லவா!! அந்த நேரமாகப்பார்த்து ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொள்ளலாமல்லவா? அந்த நினைப்புடன், இந்தப் பேச்சை உலவவிட்டனர்.

உண்மையிலேயே இவர்களுக்கு, பாங்க்குகளை தேசிய உடைமை ஆக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அதனை இருபொருள்கொண்ட பேச்சாக்காமல், திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியினரின் நோக்கம் வேறு!

**ஏழைக்கு இனிப்பு அளிப்பதாகவும் இருக்க வேண்டும், அதேபோது முதலாளிகளுக்குக் கோபமோ ஐயப்பாடோ ஏற்படாமலும் இருக்க வேண்டும்.**

**ஏழைகளின் ஓட்டுகளும் வேண்டும், முதலாளிகளின் நோட்டுகளும் வேண்டும்,**

சொல்லும் செயலும் இதற்குத் தகுந்ததாக அமையவேண்டும்.

ஏழை எளியோர்களே! எப்படிப்பட்ட புரட்சித் திட்டம் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறோம் பார்த்தீர்களா? பாங்குகளை இனி முதலாளிகளிடம்விட்டு வைக்கப் போவதில்லை, சர்க்காரிடம் அவை வந்து சேரும் என்று கூறவும்,

முதலாளிகளே! பயம் ஏன்? சந்தேகம் ஏன்? பாங்குகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளாது! எடுப்பதாக இருந்தால் Nationalisation நாட்டுடைமை ஆக்குவது என்றல்லவா கூறியிருப்போம்; இப்போது நாங்கள் சொல்வது என்ன? கவனித்தீர்களல்லவா? கருத்துப் புரியவில்லையா? Social Control

(13-ம் பக்கம் பார்க்க)

## கண்மூட தொண்டாற்று!

இரந்துண்டு வாழ்வோர்கள் இந்தியாவில்
எண்ணற்ற பலகோடி; எனினும்ஆள்வோர்
பறந்துண்டு மகிழ்கின்றார் பறவைபோலே
பலநாடு சென்றங்கே மடியையேந்தி
கரக்கின்ற படிகரந்து கடனைப்பெற்றார்
காங்கிரசின் ஆட்சியிலே அதுதான்கண்டோம்!
அரக்கமன ஆட்சிதனை அகற்றவாரீர்
அருந்தமிழே ஆள்க!என ஆர்த்துவாரீர்!

ஒருவானம் ஒருலகம் என்றேகூறி
ஒருகுடையின் ஆட்சியிலே வாழ்வதுண்டா?
ஒருமைப்பா டென்றியம்பும் இந்தியாவில்
ஓரினத்தால் ஓரினம்தான் தாழ்தல்கண்டாய்!
பெருமைமிகு செந்தமிழா! இந்திஆள
பிறர்க்கடிமை நீபட்டால் மாள்வதுண்டே!
கருமைமிகு இந்திப்பேய் காங்கிரசாட்சி
கண்மூட தொண்டாற்று; கழகம்வெல்லும்!

—கவிஞர் சுரா.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்க முடியும் என்று நினைக்கின்றன. எப்படியாவது ஒரு வழிக்குக் கொண்டுவர முடியாதா என்று ஏங்குகின்றன சில. ஆனால், சீனு இதுபற்றிக் கோரிக்கை விடுக்காமலே தான் இருக்கிறது; என்றாலும உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்வதுபற்றி, அடுத்த கிழமை கூடும் ஐ. நா. அவை விவாதிக்க விருக்கிறதாம்.

12. பாங்க் ஊழியர்களின் நீண்டகால சம்பள உயர்வுக் கோரிக்கை வெற்றி பெற்றதில் உங்களுக்கு மகிழ்ச்சிதானே!

நெஞ்சு நிறைய. 1967 பிப்ரவரி இரண்டாம் வார இறுதிக்குள் இப்படிப்பட்ட பல வெற்றிகள், பல துறையிலும் ஏற்படத்தான் வேண்டும்; ஏற்படவும் கூடும். தேர்தல் ஒன்றே மூல காரணமாக இருந்தாலும், உழைக்கும் வர்க்கத்துக்கு ஓரளவு உயர்வு என்றால் யார்தான் வரவேற்கமாட்டார்கள்! 1967 - தேர்தலை யொட்டி, அனுகூலம் அடையும் அத்துணைப் பேரும், மனதார தேர்தல் காலத்தை வாழ்த்தவும் செய்வார்களே! எதிர்க் கட்சிகளின் மீதுள்ள அச்சம் காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் என்பதனையும் அவர்கள் நன்கு அறிவார்களே!

13. ஊ-தாண்ட் மீண்டும் பதவியில் நிலைக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுக் கொண்டிருக்கிறதே, வெற்றி கிடைக்குமா?

அமெரிக்கா நினைத்தால், நிச்சயம் கிடைக்கும்!

14. காஞ்சிபுரம் தாலுகாவில் சோதனைச் சாவடிகள் (செக்-போஸ்ட்) நீக்கப்படும் என்று மத்திய அமைச்சர் அளகேசன் கருத்தறிவிப்பது எதைக் குறிக்கிறது?

கருத்தறிவிக்கிறார் என்கிறீர்; ஒரு அதிகாரியிடம் உத்தரவே போட்டார் என்கிறது தமிழக இதழொன்று. இது அதிகாரச் சீரழிவு என்றே கருதவேண்டியிருக்கிறது. ஒரே ஒரு ஐயம், இக்கருத்தறிவிப்போ, உத்தரவோ காஞ்சிபுரம் தாலுகாவுக்கு மட்டுமா, தமிழக மெங்குமா? என்பதை தொடர்புடையவர்கள் விளக்கினால் நல்லது. தேர்தல் காலமல்லவா! வாக்குப் பெறத் தடையாயுள்ள எல்லா தடைகளுமே அகற்றப்படுவது, வாக்காளர்களுக்கு நல்வாய்ப்புத்தானே!

15. வெளி நாடுகளுக்குத் திருப்பித்தரவேண்டிய தவணைக் கடனுக்கு, தவணை கேட்டிருக்கிற இந்திய அரசை என்னென்று கூறுவது?

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்ன, உயிர் நீப்பா மானம் வரின்' என்ற குறட்பாவின் விளக்கத்தை எழுதி, இந்திய அரசுக்கு அஞ்சல் செய்யுங்களேன்!

16. தமிழகத்தில் பள்ளிக்கூடங்கள் கட்ட நாலாவது திட்டத்தில் எட்டேகால் கோடிரூபாய் ஒதுக்கப் போகிறார்களே தெரியுமா?

அப்படியா! பள்ளிக்கூடங்களையெல்லாம் காங்கிரஸ் கட்டிவிட்டது என்று எங்கள் ஊரில் ஒரு காங்கிரஸ் பேச்சாளர் மேடை மீது நின்று முழங்கினாரே! அது பொய்யா? இனிமேல்தான் கட்டப் போகிறார்களா? அல்லது இன்னும் அந்த அளவுக்குத் தேவைகள் இருக்கின்றனவா?

17. கழகம் ஆட்சிக்கு வந்தால் மூன்றுபடி அரிசி கொடுக்கும் என்று கூறுகிறீர்களே? அது எப்படி?

மணமுடித்து வைக்காமலேயே எப்படிக் குழந்தை பெறுவாய் என்று கேட்டால் எப்படி? காங்கிரசுக்காரர்களால் நாசமாக்கப்பட்ட நாட்டை, நல்வழிப்படுத்த கழகம் பல திட்டங்களைக் கொண்டிருக்கிறது. தனித் திட்டங்களும், துணைத் திட்டங்களும் நாம் விரும்புகிற நல்வாழ்வை நல்க வாய்ப்பு பல கொண்டுள்ளன. எடுக்கபபடுகின்ற பல நடவடிக்கைகள் — நாட்டுக்கு நல்வழி காட்டியே தீரவேண்டும்! தேர்தல் நிதி இவர் தரமாட்டாரே, அவர் தரமாட்டாரே என்ற கவலை, கழகத்துக்கு இல்லையே!

18. கழகத்தவரை, தாக்கிக் கொல்ல காங்கிரசார் பரவலாக முயற்சிகள் மேற்கொண்டுவிட்டார்கள் என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

நன்றி. பொதுத்தேர்தல் முடிவதற்குள் எத்தகைய பயங்கரச் செயதிகளை எல்லாம் இதழ்கள் ஏந்தி வரப் போகின்றன என்பதை எண்ணிப் பார்க்கிறேன்; பல தெரிகின்றன பளிச்சென! ஆனாலும் நீங்கள், உங்கள் கடமையை, காங்கிரசாரின் ஒத்தகை இழித்த நடத்தையை, காங்கிரஸ் ஆட்சியின் கேடுபாடுகளை, ஜனநாயகப் படுகொலைகளை, போலி சோசலிச சித்தாந்த வாதத்தை, வாக்குறுதிகள் மீறப்படும் தன்மைகளை, மொழிக்குச் சூழவிருக்கும் பேராபத்தை, இந்தித் திணிப்பின் கடுமையை— அதன் விளைவை, பசி, பட்டினி, பற்றாக்குறையின் காரணத்தை அரசுக்கும், கட்சிக்கும் வேறுபாடற்ற தன்மையில் செயல்படும் நிலையினை, உரிமைகேட்டால் உயிரைப் பறிக்கும் கொடுமைகளை, இன்னும் நீங்கள் உணர்ந்து, ஊராருக்கு உணர்த்தப்பட வேண்டும் என்று உணருபவைகளைத் துணிவோடு, நாளுக்குநாள் மணிக்கு மணி, போகிற, வருகிற இடங்களில் சந்திக்கின்ற எல்லாருக்கும் எடுத்துக் கூறிக் கொண்டே இருங்கள். பலிபீடங்களின் மீது எழுப்பப்படுவது தான் சர்வாதிகார ஆட்சி; அதனைச் சரித்துச் சாய்ப்பதுதான் ஜனநாயக மாட்சி என்பதை அன்றாடம் அவனிக்கு அறிவித்துக்கொண்டே இருங்கள், வெற்றி நமக்கு நிச்சயம்!

❋

## விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் அக்டோபர் மாதபில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவறாமல் அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறோம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
'காஞ்சி'

மாரிமுத்தைக்கண்டதும், செந்தாமரையும் சிதாரியும், 'நீங்களா?' என்று ஒரே நேரத்தில் ஆச்சரியத்தோடு கேட்டுவிட்டனர்.

'ஆமாம் செந்தாமரை, நான்தான்! நீங்கள் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்!' என்று சொல்லிவிட்டு அவன் சிரித்தான்.

"எப்பொழுது மாரிமுத்து நீங்கள் இங்கு வந்தீர்கள்?' என்று வியப்பிற்கிடையே செந்தமரை வினவினுள்.

"தூமகேது இந்தச் சோலையினுள் நுழைந்ததைக் கண்டதும், அவனோடு சிறிது நேரம்பேசி புதுச் செய்திகளை அறியலாமே என்ற எண்ணத்தோடு பின் தொடர்ந்தேன்! நீ இங்கு இருப்பதைப் பார்த்ததும், அப்படியே ஒரு மரத்தின் பின்னுல் ஒளிந்துகொண்டேன்! நீயும் அவனும் என்ன பேசுகிறீர்கள் என்பதை அறியவே அப்படி நான் செய்தேன்; நீயும் அவனும் பேசியதையும், அவன் சென்றுவிட்டபிறகு சிதாரி உனக்குச் செய்த உபதேசத்தையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்!"

"அப்படியா?"

"ஆமாம் செந்தாமரை, நீ பத்தரைமாற்றுத் தங்கம் என்பதைத் தெரிந்துகொண்டேன்! சிதாரி செய்த உபதேசம் நியாயமானதே! அப்படித்தான் எவரைப்பற்றியும், தனித்தனி முனைகளில் நின்று அலசிப்பார்க்கவேண்டும்...!"

"சிதாரியைப்பற்றி இப்பொழுது எதற்குப்பேச்சு—அவள் குணமே அப்படி!...மாரிமுத்து, அத்தானைப் பார்த்தீர்களா? என்னைப்பற்றிக் கூறினீர்களா?"

"சோலையப்பனைப் பார்த்தேன்-நீ யார் என்பதையும் அவனிடம் விளக்கினேன்!"

"என்ன சொன்னுர், அத்தான்!"

"மாரிமுத்து சொல்லிவிட்ட பிறகு, தனியாக அவன் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது!"

"அப்படியானுல், இழந்த அத்தானைத் திரும்பவும் அடைந்துவிட்டேன் என்று சொல்லுங்கள்?' என்று மகிழ்ச்சி துள்ளும குரலில் சொல்லிக்கொண்டே, கல்லாசனத்தை விட்டுச் செந்தாமரை எழுந்தாள்.

"வந்தது ஆபத்து!" என்று சிதாரி முணுமுணுத்ததைக் கேட்டதும், 'என்னடி ஆபத்து?' என்று சிறிது வெறுப்போடு செந்தாமரை கேட்டாள்.

'இந்த முயல் இப்படியப்படி சாதுபோல இருந்தது, கடைசியில் பல்லால் கவ்வ ஆரம்பித்துவிட்டது அம்மா!' என்று சிதாரி கூறிக்கொண்டே, கையிலிருந்த முயலைக் கீழே விட்டாள். மறு நொடியே அது காற்ருய் மறைந்துவிட்டது!

'செந்தாமரை! இப்பொழுது நான் சோலையப்பனைப் போய்ப் பார்க்கப் போகிறேன்! இங்கு நடந்ததைக் கூறினுல் — அப்படியே அவன் பூரித்துப் போவான்!'

'மாரிமுத்து!'

'ஏன் தயங்குகிருய், சொல் செந்தாமரை!'

'நானும் உம்மோடு வரலாமா?'

'வேறு வினையே வேண்டாம்! தங்களது சொந்தக் காரியம் என்ருல், ஏனே குழப்பமடைந்துபோய் — எதையும் தவருகவே செய்துவிடுகிறீர்கள். என்று சிதாரி சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையாகத்தான் இருக்கிறது! நம் இருவரையும் ஒன்ருகப் பார்த்தால் தூமகேதுக்குச் சந்தேகம் தோன்ருதா?'

'ஆமாம் மாரிமுத்து, நீங்கள் சொல்வதும் சரிதான்!'

'நாளை காலை நீ வருகிருய் என்று அவனிடம் சொல்கிறேன். பாவம், இரவெல்லாம் தூங்கமாட்டான்!' என்று குறும்போடு மாரிமுத்து சொன்னதும், நாணத்தோடு செந்தாமரை முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

சோலையப்பனுக்கு மட்டுந்தானு, அன்றிரவு தூக்கம் வரவில்லை— செந்தாமரைக்குந்தான் படுக்கை முள்ளாய்க் குத்தியது! எப்பொழுது புலரும்—இரவு அகலும் என்று அவள் துடி துடித்துப் போனுள்.

ஆடை—அணி அலங்காரங்கள் செய்துகொண்டு சிதாரியையும் உடன் அழைத்துக்கொண்டு செந்தாமரை சிறைச்சாலைக்குச் சென்ருள்.

படிகளின் வழியாக இறங்கி வந்த மான் விழியாளைக் கண்டதும்,

அடி மூச்சுக் குரலாலே "செந்தாமரை"! என்ருன், சோலையப்பன்.

அவள் கால்கள் நிலை கொள்ளாமல் தகதகவெனக் குதிக்க ஆரம்பித்துவிட்டன. நான்கைந்து படிகளை ஒன்ருகத் தாண்டிக் குதித்து, சிறைக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, "அத்தான்!" என்ருள் நீண்ட பெருமூச்சுக்கிடையே!

சிறைக் கதவுகளை சிதாரி திறந்துவிட்டதும், செந்தாமரை ஒரே தாவாக உள்ளே தாவினுள்!

தாவி வந்த அந்தத் தளிர்மேனியாளை, அவன் அள்ளியெடுத்து மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

தலையைப் பின்புறம் சிறிது சாய்த்து — அவன் முகத்தைப்

பார்த்தபடி — கனியுதடுகள் துடி துடிக்க, 'அத்தான்'! என்றாள்.

சிதாரி முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அவள் கண்கள் கலங்கின. கண்ணீரைத துடைக்காமலேயே படிகளில் ஏறினாள்.

அரண்மனை சரிந்துவிட்டதைப் போலவும் — சிம்மாசனம் தரையில் விழுந்து பிளந்து கிடப்பதைப் போலவும் — மணிமுடி உடைந்து கிடப்பதைப் போலவும் — மீன் கொடி கிழிந்து புழுதியில் புரளுவதைப் போலவும் — கழுகுகள் வட்டமிடுவதைப் போலவும் — சிதாரியின் மனக்கண் முன் ஒரு காட்சி தோன்றியது!

எல்லாம் நாசம்! எல்லாம் நாசம்! என்று அவள் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

## 2—22

## அஞ்சலை திடுக்கிட்டாள்

சோலையப்பனும் செந்தாமரையும் ஈருடலையும், ஓருடலாக்கி நின்றிருந்தனர். உள்ளத்தோடு உள்ளம்பாய்ந்து கவ்வ உதட்டோடு உதடு ஒட்டி அழுந்த, உடலோடு உடல் உருகி சங்கமமாக... அந்த இன்பக் காதலர், சிறகு கட்டிச் சிறு சஞ்சலமும் இல்லாத மேக மண்டலத்தில் பறந்துகொண்டிருந்தனர்.

சிதாரி முகமாற்றமடைந்ததையும், கண்ணீர் உகுத்ததையும், அவ்விடத்தைவிட்டு மறைவாய்ப் போய்விட்டதையும்-அவர்கள் அறியார்கள். அவர்கள் தாம் ஒருவரை ஒருவர் பார்த்ததுமே, இருக்கும் இடத்தையும் — சூழ்நிலையையும்— மறந்துவிட்டார்களே!

'அத்தான்! அத்தான்!' என்று செந்தாமரையின் செவ்விதழ்கள் முணுமுணுத்தன.

"கண்ணே! இது கனவு அல்லவே? என்று கன்னத்தோடு கன்னத்தைத் தேய்த்தபடி, அவன் தனக்குத்தானே பேசிக்கொள்பவனைப்போல மெள்ளக் கேட்டான்.

சோலையப்பனின் அகன்ற மார்போடு தான் இணைந்திருப்பதும் — அவன் கரங்கள் தன் மெய்யை வளைத்திருப்பதும்-அவன் கண்கள் தன் கண்களைச் சொக்கச் செய்வதும் — காளையின் பேச்சுதான் கன்னியுள்ளத்தை நாட்டியமாடச் செய்வதும்-கனவா நினைவா என்ற சந்தேகம், செந்தாமரைக்குக்கூடத் தான் எழுந்தது.

'கண்ணே'

போதை நிறைந்த குரலில் அவன் அழைத்தான்.

'அத்தான்!'

அவளது கனி உதட்டிலிருந்து உதிர்ந்த இந்த வார்த்தையில், ஒரு வித மயக்கம் தோய்ந்திருந்தது.

அவளது அழகு முகத்தை இரு கைகளாலும் பிடித்து நிமிர்த்தி, ஆர்வத்தோடு கண் சிமிழ்க்காமல் பார்த்தான். அவன் உள்ளத்தில் பீறிட்டெழுந்தது ஓர் இன்ப இசை!

'செந்தாமரை!' என்று பூரிப்போடு சொல்லிக்கொண்டே, அவளைத் திரும்பவும் இறுக அணைத்துக்கொண்டான்.

அவள் ஏதோ சொல்ல நினைத்தாள். ஆனால் பேச முடியாமல் திணறினாள். அவ்வாறு திணறிய நேரத்தில், அவள் உள்ளத்தில் ஒரு துன்ப உணர்ச்சி மின்னலிட்டது.

'இவருக்கும், இவர் கொண்ட இலட்சியத்திற்கும் நான் செய்த துரோகங்கள் எவ்வளவு'

இந்த நினைவு வந்ததும், அவள் மனம் பகீர் என்றது. வெட்கமும் வேதனையும், இதயத்தைத் தேள்களாய்க் கொட்டின. கண்கள் கலங்கின.

மார்பில் அணிந்த அந்த வண்ண மலர் மாலையைக் கழற்றியெடுக்க, சோலையப்பனின் மனம் இசையவில்லை. அந்தக் கண்கவர் மாலையின் மென்மையையும் குளிர்ச்சியையும்-அழகையும்-மணத்தையும் – அனுபவித்தபடி, வாழ்நாள் முழுவதும் இப்படியே இருந்துவிட்டால் என்னவென்று அவனது காளையுள்ளம் கருதிற்று. அப்படிக் கருதிய மறுநொடி அவன் திடுக்கிட்டான்— தன் கால்களில் வீழுந்த கண்ணீர்த் துளிகளைக் கண்டு!

மார்போடு பிணைந்திருந்த மலர் மேனியாளைத் தனியாகப் பிரித்து நிறுத்தி, 'துன்பச் சூழலிலிருந்து தப்பி இன்பக் கரையேறியிருக்கும் இந்நேரத்தில், எதற்காகக் கண்ணீர்விடுகிறாய், கண்ணே!' என்று பதைபதைப்போடு கேட்டான்.

கண்களைத் துடைத்துக்கொண்டு தேன் இதழ்களில் புன்னகை அரும்ப, துன்பத்தைத் தாளமுடியாமல் கண்ணீர்விடுவதைப் போலவே—இன்பத்தையும் தாங்க முடியாமல் பெண்கள் கண்ணீர் விடுவார்கள்! இது அவர்களின் பிறவிக்குணம் அத்தான் என்றாள்.

செந்தாமரை! மாரிமுத்து எல்லாவற்றையும் கூறினான்! அவன் தூமகேதுவின் அருகில் நீ நின்று, அலட்சியத்தோடு என்னைப்பார்த்து -ஏளனத்தோடு பேசியபோது என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? கோபமும் வருத்தமும் எவ்வளவு கொண்டேன் தெரியுமா? ஆனால் நடந்ததையெல்லாம் மாரிமுத்துதெளிவாகச் சொன்னதைக் கேட்டபோது, பரவசத்தைத் தாள முடியாமல் என் இதயமே நின்றுவிடும்போலாகிவிட்டது!

"அத்தான்! நான் வஞ்சகி! காதகி! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய உளுத்த மனக்காரிதான்! தூமகேதுவின் இரும்புப் பாதங்களுக்கு அடியில் வைத்து உம்மை நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் — உம்மோடு நான் கற்கண்டு மொழியில் பேசியதும்—காதல் பார்வை வீசியதும்! தூமகேதுவின் ஒற்றர் குழுவைச் சேர்ந்தவள்தான் நான்! சைவத்திற்கும் ஒற்றர் நாயகத்திற்கும் மாறுபட்டவர்களை—கேடு செய்பவர்களை —மண்ணோடு மண்ணாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடே நான் பணியாற்றினேன், பவனியும் வந்தேன்! ஆனால் அன்றிரவு நிலாமுற்றத்தில் நான் தடுத்தும், அடித்தும் — என்னை விடாமல் — இழுத்து அணைத்து, இன்பத் தடாகத்தில் தள்ளிவிட்டீர்! அந்தக் கணமே, ஒற்றர் குழுவைச் சேர்ந்த செந்தாமரை செத்துவிட்டாள்! சோலையப்பரின் காதலியான செந்தாமரை, செய்த துரோகங்களை நினைந்து நினைந்து சித்தம் கலங்கவும், கண்ணீர் சிந்தவும், ஊண் உறக்கம் இல்லாமல் உருக்குலையவும் தொடங்கினாள்!......"

செந்தாமரையின் குரலில் சோகம் பீறிட்டது. கண்களில் நீர் கொப்பளித்தது.

"அழாதே செந்தாமரை—அனைத்தையும் நான் அறந்தேன், மாரிமுத்துவின் மூலம்! ஓடிய சம்பவங்கள், ஓடியவையாகவே இருக்கட்டும்! சென்றவை, சென்றவையாகவே இருக்கட்டும்; பிணங்களுக்கு உயிர் கொடுத்து—அவற்றின் கோர நடனத்தைக் கண்டு — நாம் அலறவோ அகம் நோகவோ வேண்டாம்! இனி நாம் புதுவாழ்வு தொடங்குவோம்! எதிர்காலத்தை நோக்குவோம்! எழில் மிகு பாண்டிய நாட்டின் ஏற்றத்திற்கும் வாழ்விற்குமான பணிகளை அயராது ஆற்றுவோம் என்ற உறுதி கொள்வோம! தோள் உயர்ததுவோம்—தோற்றேடச் செய்வோம் எதிரிகளை!"

"செய்வோம் அத்தான், செய்வோம் நாம்! செந்தமழரின் வாழ்விற்காகச் செங்குருதியையும் சிந்துவோம்! சிந்த உறுதி கொள்வோம்—செயலில் இறங்குவோம்!"

"அட்டியில்லை கண்ணே, அச்சமுமில்லை! ஆகவேண்டியவை யெல்லாம், இனி உன்னால்தான் ஆக வேண்டும் செந்தாமரை!"

"உறுதி கொண்டுவிட்டேன் அத்தான்!"

"கண்ணே! உன் ஆற்றலில் அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு எனக்கு! செந்தாமரை நாம் என்று சொல்கிறேனே—அதன் பொருள் பூரணமாக உனக்குப் புரிகிறதா?"

"நாம் — இதன் பொருளா?"

"ஆமாம் கண்ணே!"

"நம் உத்தமர் பொன்னையாவின் மரபில் தோன்றியவர்கள்—"

"அதுவும்ஒருபொருள் தான்! ஆனல் நேரடியாக 'நாம்' என்றல், நீயும் நானும் என்று தானே அர்ததம்!"

"ஆமாம் அத்தான்!"

"இந்த 'நாம்' என்பதற்கு,என்னபொருள் உனக்குப் புரிகிறதா?"

"தங்கள் மனத்தில் உள்ளதை என்னல் புரிந்துகொள்ள முடியவில்லையே, அத்தான்!"

"நாம் என்றல் செந்தாமரையும் சோலையப்பனும் என்று தானே கொள்ளவேண்டும்!"

"ஆமாம்!"

"ஆமாம் கண்ணே, சோலையப்பன் என்ன ஆகப்போகிறன்—எங்கிருக்கப் போகிறன்!"

"அர்த்தம புரியவில்லையே அத்தான்!"

"செந்தாமரைதான் இனி சோலையப்பனும!"

"பயம் அதிகமாகிறதே அத்தான் தங்கள் மர்மப் பேச்சைக் கேட்கக் கேட்க!"

"பயந்தோ, பதறியோ இனி நம்மால் ஆகப்போவது ஒன்றுமல்லை, கண்ணே! நீயே சொன்னய்—தூமகேதுவின் இரும்புப் பாதங்களுக்கு அடியில் வைத்து என்னை நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடே காரியமாற்றினய் என்று! இரும்புப் பாதங்கள்! ஆமாம், செந்தாமரை-அந்த இரும்புப் பாதங்களுக்கு அடியில் நான் சிக்குண்டு விட்டேன்! நாசமாவதைத் தவிர—நசுங்குண்டு இறப்பதைத் தவிர இனி எனக்கு மீள மார்க்கமில்லை!"

"விடுதலையடைய—விரும்பிய வாழ்வு பெற—மார்க்கமிருக்கிறது அத்தான், மார்க்கமிருக்கிறது!"

"உன்னைப் போலத்தான் மாரிமுத்துவும் நம்பிக்கையோடு பேசினன். அவனல்தான் தூமகேதுவைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றல் உன்னுலுமா முடியவில்லை? நான் விடுதலையடையவேண்டுமென்று நீங்கள் கொண்ட ஆர்வம் — உங்கள் அனுபவத்தையும் மறக்கும்படிச் செய்துவிட்டிருக்கிறது! எந்த விதமான குழப்பமும் இல்லாமல், நான் தெளிவோடு இருக்கிறேன்! ஆகவே எதிர்காலம் என்ன என்பதை ஊடுருவிப் பார்க்க முடிகிறது என்னல்! பொன்னையாவின் புதையல் என்ற புதிய ஆசையைத் தூண்டி விட்டுவிட்டோம்-மமதையாளனின் கண்களில் மண்ணைத் தூவியாகிவிட்டது-எத்தன் ஏமாந்தான்-ஏதுமில்லை இனித் தடை-என்று நீ நினைக்கிருய்! பொன்னையாவின் புதையல், அந்தப் பேராசைக்காரனின் உள்ளத்தில் தேனூறச் செய்திருக்கும்—இல்லை எனறு நான் கூறவில்லை! ஆனலும், தூமகேது எப்படிப்பட்டவன் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டாமா, ஆசை உள்ளத்தில் கொக்கரித்தெழுந்தாலும், அவன் அறிவை இழந்துவிடமாட்டான்! ஏமாளியாகிவிடமாட்டான்!—எச்சரிக்கையோடே இருப்பான்!..."

"அவன் ஆற்றல் மிக்கவன் தான் அசகாயசூரன் தான் — ஆனலும் அவனை ஏய்க்கவும் ஏமாற்றவும் முடியும் என்னல்! அவன் என்னை நம்பிவிட்டான்-பூரணமாக!"

"அந்த நம்பிக்கை எத்தனை நாட்களுக்கு இருக்குமென்று நினைக்கிருய்?"

"வெளிப்படையாக நானே உண்மையை அவனிடம் சொல்லும்வரைக்கும்!"

"என் மீது கொண்ட ஆசை, உன்னை அந்த அளவிற்கு நம்பிக்கைக் கொள்ளச் செய்கிறதே ஒழிய, அதில் உண்மை ஒரு துளியும் கிடையாது செந்தாமரை. எப்படியும் என்னைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்ற எண்ணம் எப்பொழுது உன் உள்ளத்தில் நுழைந்துவிட்டதோ அப்பொழுதே உன் மற்ற திறமைகள் எல்லாம் சகதியிழந்துவிட்டன!"

"செந்தாமரையைத் தாங்கள் பூரணமாகத் தெரிந்துகொள்ளவில்லை அத்தான்! தோளில் ஒரு

துணிப் பை தொங்க, ஒரு கையால் சுருதி மீட்டிக்கொண்டு, மற்றொரு கையால் தாளத்தைத் தட்டிக்கொண்டு வாயைத்திறந்து உரத்த தொனியில் பாடிக்கொண்டு செல்லும் தெருப்பாடகியைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அவள் ஒரே சமயத்தில் பல காரியங்களைச் செய்கிறாள்! சுருதி மீட்டுகிறாள், தாளம் தட்டுகிறாள், இனிமையாகவும் பாடுகிறாள்! இவ்வளவும் செய்யும் அவள் மனத்தில் என்ன எண்ணம் சுழன்றுகொண்டிருக்கும் தெரியுமா? தோளில் தொங்கிக்கொண்டிருக்கும் அந்தத் துணிப்பை எப்பொழுது நிரம்பும் என்ற எண்ணம் அல்லவா, அவள் மனத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கும்! பை நிறையவேண்டும் என்ற ஒரே நோக்கம் கொண்ட அவளிடத்தில் இசை பழுதுபடுவதையோ, சுருதி நிற்பதையோ, தாளம் தவறுவதையோ, நாம் காண்கிறோமா? இல்லையல்லவா? அந்தத் தெருப்பாடகியைப் போலத்தான நானும்! அத்தானை மீட்க வேண்டுமென்ற ஒரே இலட்சியத்தால் என் இதயம் இயங்கியபோதிலும், அந்த இலட்சியத்தை அடைவதற்காகச் செய்யப்படும் சாகசங்களில் ஒரு துளியும் சக்தியிழந்தவளாகிவிடமாட்டேன்! என் திறமையை வேறு யாராவது குறைத்து மதிப்பிட்டாலும், நான் ஆச்சரியப்படமாட்டேன்—ஆனால் தாங்களே அவ்வாறு மதிப்பிடுவதென்றால்...''

"நான் மதிப்பிடுவதால்தான் உண்மையைத் தெரிந்துகொள்ள முடிகிறது! செந்தாமரை! நீயும் மாரிமுத்துவும் எவ்வளவுதான் நம்பிக்கைகொண்டிருந்தாலும் எனக்கென்னமோ கொஞ்சமும் நம்பிக்கை ஏற்படவில்லை—இனி நான் வெளி வருவேன் என்று! ஆகவே என் மனத்தில் இருப்பவற்றை உன்னிடம் கொட்டிவிடவேண்டுமென்று துடிக்கிறேன்! கண்ணே நான் கொல்லப்பட்டால்...''

"அய்யோ வேண்டாம், அத்தான் இவ்வாறெல்லாம் தாங்கள் சந்தேகப்படுவதையும், பேசுவதையும் என்னால் தாளமுடியாது அத்தான், தாளமுடியாது!''

"என் சபதம் உனக்குத் தெரியும்....!''

அந்தச் சபதத்தைத் தாங்கள் முடிக்கப்போகிறீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது!''

"எனக்கேதாவது நேரிட்டால் ...''

"நேரிடாது! இந்தச்செந்தாமரை உயிரோடு இருக்கும்வரை நிச்சயமாய் நேரிடாது அத்தான்! என்று தேம்பிக்கொண்டே கூறி அவனது வாயைத் தன் மலர்க்கரத்தால் மூடினாள்.

அந்த வளைக் கரத்தைப் பிடித்தெடுத்து புன்னகையோடு அதற்கொரு முத்தம் தந்தான்.

"செந்தாமரை! என் மனத்தில் இன்னொரு கவலை நிரந்தரமாக நிலைத்துவிட்டிருக்கிறது!'' என்று சோகத்தோடு சொல்லிக்கொண்டே பக்கத்திலிருந்த ஓர் ஆசனத்தில் போய் உட்கார்ந்தான். கவலையோடு இருந்தவனின் கால்களுக்கு அருகே தரையில் அமர்ந்து, அத்தானின் பாதங்களைத் தடவிக்கொடுத்தபடி, அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

"அஞ்சலை — அருமை நண்பன் பொன்னையாவின் தங்கை- எங்கோ சிறைவைக்கப்பட்டிருக்கிறாள்! அணுதுன்பமும் அவளை அண்டாதபடி, அவ்வளவு பாசத்தோடும் பத்திரத்தோடும் நான் பாதுகாப்பேன் என்ற நம்பிக்கையினால்தானே, பொன்னையா உயிர் துறந்தான்! அந்த உத்தமனின் தங்கை, எந்த முரடனிடம் சிக்கியிருக்கிறாளோ? எவ்வளவு இன்னல் அனுபவிக்கிறாளோ? அவளைத் தேடிக் கண்டுபிடித்து, துன்பத்தைத் துடைக்க முடியாத நிலையில் இங்கு நான் அடைபட்டிருக்கிறேன்! என்னைக் காப்பாற்றவும் விடுவிக்கவும், நீயும் மாரிமுத்துவும் பாடுபடுகிறீர்களே ஒழிய, அவளைப்பற்றிக் கொஞ்சமாவது அக்கறை எடுத்துக்கொள்கிறீர்களா?''

"நீங்கள் நினைப்பதைப்போல மாரிமுத்துவோ அல்லது நானோ அஞ்சலையின் செய்தியில் அக்கறை அற்றோ, அலட்சியத்தோடோ இல்லை அத்தான்! அவளைத் தூமகேதுதான் எங்கோ பதுக்கிவைத்திருக்கிறான்!''

"அந்த இடத்தை அறிந்து சொல்வதாக, நீ மாரிமுத்துவிடம் கூறினாயாமே?''

"ஆமாம் அத்தான், கூறினேன்! ஆனால் தங்களைக் காணவேண்டும் என்ற துடிப்பில்.....'' என்று பேச்சை முடிக்காமலேயே, அவள் தலையைக் குனிந்துகொண்டாள்.

"அதை நான் அறியமாட்டேனா, செந்தாமரை! தூமகேதுவிடம் அஞ்சலையைப்பற்றி அறிவதற்கு முன்னர், என்னைப்பார்க்க என்ன பொய்சொல்லி அனுமதி பெறலாம் என்றுதானே நீ யோசித்துக்கொண்டிருப்பாய்? பொன்னையா உயிரோடு இருந்திருந்தால், அஞ்சலையின் நிழலைக்கூடத் தொட, தூமன் பத்திற்கு துணிவுவந்திருக்காதே?'' என்று கவலையோடு சோலையப்பன் சொன்னான்.

அதே எண்ணந்தான் — உப்பரிகையின் திறந்த வெளியில் நின்றிருந்த அஞ்சலையின் உள்ளத்திலும் எழுந்து அவள் கண்களைக் கலங்கச் செய்தது!

கைப்பிடிச் சுவரின் பக்கத்தில் அழகாகச் செய்துவைக்கப்பட்டிருந்த மயிலைப் பார்த்தபடி, 'அண்ணா உயிரோடு இருந்திருந்தால், இப்படித் திக்கற்றவளாக நான் ஆகிவிட்டிருப்பேனா? தீண்டத்தான் அந்நியனுக்குத் துணிவு உண்டாகியிருக்குமா? என்று வேதனையோடு முணுமுணுத்தாள்.

அந்த மயிலின் தலையைத் தடவிக்கொடுத்தபடி, அவள் பார்வையைக் கீழ தோட்டத்தில் செலுத்தினாள்.

அவள் மனம் திடுக்கிட்டது! கண்கள் மிரண்டன! கால்கள் சில்லிட்டுவிட்டன!

சேரநாட்டு இளவரசன் கனகசேனன், வளைத்த வில்லில் அம்பை வைத்துக் குறிபார்த்தபடி, ஒரு மரத்தடியில் நின்றிருந்தான்! அந்த அம்பின் முனையில் ஒரு ஓலை இருப்பதைக் கண்டதும், அவள் திகைப்பு இன்னும் அதிகமாகிவிட்டது!

(வளரும்)

## காவல் துறையினர் கவனத்திற்கு....

எங்களூரில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு காங்கிரசுக் கட்சியார், நினைவுக் கூட்டம் ஒன்று கூட்டினார்கள். மகாத்மாவைப் பற்றி ஏதேனும் கூறுவார்கள் என எண்ணிச் சென்றோம்; ஆனால், காந்திஜியைப் பற்றி ஏதும் கூறவில்லை. மற்றக் கட்சியினரைத் திட்டியும் குறைத்தும் கூறினர்.

ஏமாந்த நாங்கள் எழுந்து வந்துவிட்டோம்!

—கி. தேவராசன், வாணியம்பாடி-1.

(ஆதாரம் 'குமுதம்' 20-10-66)

# சந்தைச் சதுக்கங்களில் சிந்திசைக்கின்றனர்

7-ம் பக்கத் தொடர்ச்சி

சமுதாயக் கட்டுப்பாடு என்றுதான் கூறினோம்; வேறில்லை; ஆகவே வீண் குழப்பம் கொள்ளாதீர் என்று கூறிடவும்,

**ஏழைகளே! உங்களுக்காகப் பாடுபடும் எமக்கு உமது ஓட்டுகளைத் தாருங்கள்!! என்று கேட்டிடவும்,**

**முதலாளிகளே! உங்கள் ஆதிக்கத்தை அனுமதித்து வருகிறோம்; அது நிலைத்திருக்கவேண்டுமாயின் ஆட்சியில் நாங்கள் இருந்திடவேண்டும்; முற்போக்காளர் வந்திடின் Nationalisation நாட்டுடைமை ஆக்கிவிடுவர் உம்மிடமுள்ள பாங்குகளை; நாங்கள் ஆட்சியில் இருந்திட வழி செய்திடின், Nationalisation நாட்டுடைமை ஆக்குவது அல்ல, Social Control சமுதாயக் கட்டுப்பாடு மட்டுமே திட்டமாக இருக்கும்; ஆகவே எடும் நோட்டுகளை! கொடும் தாராளமாக!! என்று கேட்டிடவும், வழி செய்து கொள்ளவே இந்த முயற்சி.**

நாணயக் குறைவான முயற்சி அல்லவா என்று கேட்கத் தோன்றும்: ஆனால் தம்பி! நாணயத்தின் மதிப்பையே குறைத்திடத் துணிந்தவர்கள் இதற்கா கூச்சப்படப் போகிறார்கள்!

அதெல்லாம் இல்லை. உங்கள் அண்ணாத்துரை பழிபோடுகிறான், எங்கள் நோக்கம் இருபொருள் கொண்ட பேச்சுப்பேசி இருதரப்பினரின் ஆதரவையும் பெறுவது என்பதல்ல: சமுதாயக் கட்டுப்பாடு என்றாலே நாட்டுடைமை ஆக்குவது என்பதுதான் பொருள் என்று தம்பி! யாரேனும் நாவாணிபம் புரிந்திடுவோர் வாதாட முன்வந்திடின் — அதற்காகவே நம்மை ஒப்படைத்துவிட்டோர் உளர் — அவர்களை காங்கிரஸ் மூலவர்களிலே ஒருவரும், இரயில்வே அமைச்சருமான S. K. பட்டீல் பேசியிருப்பதனைப் படித்துப் பார்க்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்.

பட்டீல், இவர்களின் குட்டு உடைபட்டுப்போகும் விதமாகப் பேசி இருக்கிறார்.

இவரும் எர்ணாகுளத்தில் இருந்தவர்தான்! பாங்குகள் பற்றிய திட்டத்தை எதிர்த்தவரும் அல்ல!

இவருடைய வார்த்தை கவனிக்கத் தக்கதல்ல என்று கூறிடவும் முடியாது.

இவருடைய 'தயவு' தேவை இல்லை என்று காங்கிரசும் கூறிவிட முடியாது. இவர் மூலமாகவே, பெரிய புள்ளிகளிடம் பணம் பெறப்படுகிறது தேர்தல் நிதிக்கு. பொருளாளர்!!

• ஆகவே எஸ். கே. பட்டீல், பாங்கு சம்பந்தமாக ஏற்பட்ட தீர்மானத்தை விளக்கிக் காட்டியிருப்பது, உண்மை நிலைமையை எடுத்துக் காட்டுவதாகும்.

பேசவேண்டிய இடத்தில்தான் பட்டீல் பேசி இருக்கிறார்.

மகாராஷ்டிரா கவர்னர் செரியன் தலைமை வகித்திட, செல்வபுரியினர் நாலாயிரவருக்கும் அதிகமாகக் கொலுவிருக்க, பம்பாய் நகர மணி மண்டபத்தில் இந்தத் திங்கள் இருபத்தி இரண்டாம் நாள், 'சிறப்பு விருந்தினராக' அழைக்கப்பட்டிருந்த பட்டீல், திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்,

**பாங்குகள் தேசிய உடைமை ஆக்கப்படமாட்டா என்று உறுதி அளிக்கிறேன் என்று.**

கனரா பாங்கியின் வைர விழாக் கொண்டாட்டத்திலே அவர் சிந்திய முத்து இது!

எர்ணாகுளம் தீர்மானம் பற்றி, பலர் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்களே, தீவிரவாதிகள் பாங்குகளைக் காங்கிரஸ் அரசு நாட்டுடைமை ஆக்கிவிடும் என்று பொருள் கூறுகிறார்களே பட்டீல் இதுபற்றி என்ன கூறுகிறார் கேட்போம் என்ற நோக்குடனேயே வைர விழாச் சொற்பொழிவாற்ற அழைத்தனர்!

எர்ணாகுளம் தீர்மானம் பற்றிய உண்மையான பொருளைக் கேட்டறிந்து கொள்வோம் என்ற நோக்கத்துடன் செல்வபுரியினர் நாலாயிரவர் கூடினர்.

**எதற்கு அழைத்தார்கள் என்பதையும் அவர்கள் மனதிலே எந்தவிதமான சந்தேகமும் அச்சமும் புகுந்திருக்கும் என்பதையும், அவர்களுடைய அச்சத்தைப் போக்காவிட்டால் தன் ஆட்சிக்கும் கட்சிக்கும் எத்தகைய இன்னலும் இழப்பும் ஏற்படும் என்பதையும் நன்றாகப் புரிந்துகொண்டே பட்டீல் பேசியிருக்கிறார்**

Mr. Patil asked Bankers not to entertain the fear that because the Congress election manifesto mentioned social control over banks and life-insurance it had armed itself with blanket powers to nationalise banks overnight. There need be no such fear.

**காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் பாங்குகள், இன்ஷூரன்ஸ் அமைப்புகள் ஆகியவைமீது சமுதாயக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதனால், திடுமென இவைகளை நாட்டுடைமை ஆக்கிவிடும் அதிகாரத்தை காங்கிரஸ் அரசு பெற்றுக்கொண்டுவிட்டிருக்கிறது என்று எண்ணி அச்சம்கொள்ள வேண்டாமென்று பட்டீல், பாங்குக்காரர்களைக் கேட்டுக்கொண்டார்! அவ்விதமான அச்சம் இருக்கத் தேவையில்லை என்று அவர் கூறினார்.**

தம்பி! எப்படி இருக்கிறது பார்த்தனையா. இவர்கள் போக்கு! எர்ணாகுளம் தீர்மானத்தை தூக்கிக்கொண்டு சந்தைச் சதுக்கம் சென்று சிந்துபாடுகிறார்கள் காங்கிரஸ் பேச்சாளர்கள்

தீவிரமான திட்டம்
புரட்சித் திட்டம்
புதுமைத் திட்டம்
பொதுவுடைமைத் திட்டம்

என்றெல்லாம்; ஆகவே எமக்கு 'ஓட்டு' — என்று இறைச்சலிடுகின்றனர்.

# 'இரட்டை நாக்கு' எத்தனைக் காலம்?

பட்டீலோ, செல்வபுரியினரைக் கூட்டிவைத்து தேர்தல் அறிக்கையிலே ஏதோ நாலுவார்த்தை எழுதிவிட்டதால் என்ன குடி மூழுகிவிடும்! ஏன் இந்தப் பயம்! யார் உங்கள் பாங்குகளை எடுத்துக்கொள்ளப் போகிறார்கள்! ஒரு பேச்சுக்குச் சொன்னோம், Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்று! அதற்காகவா அச்சம்! இப்போது என்ன, பாங்க்குகளை எடுத்துக் கொள்ளும் அதிகாரத்தையா, அந்தத் தீர்மானம் கொடுத்துவிட்டிருக்கிறது, பயம் வேண்டாம்—என்று கூறுகிறார்.

அதிகாரத்தில் உள்ளவர்களைக் கண்டு மயங்கிடுவோரும் மிரண்டிடுவோரும் அதிக அளவு இல்லாமல், ஆள்பவர்கள் நமது ஊழியர்கள், நம்மை ஆட்டிப் படைக்கும் தேவதைகள் அல்ல என்ற உணர்வுகொண்டோர் பெருமளவும் உள்ள எந்த நாட்டிலும், இப்படி 'இரட்டை நாக்கு'க் கொண்ட ஒரு கட்சியை ஆட்சியிலே வைத்திருக்கமாட்டார்கள். இங்குதான் இடம் இருந்திட முடியும்—அதுவும் அதிக நாட்களுக்கு அல்ல—இப்படி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்களுக்கு.

காங்கிரசின் தேர்தல் அறிக்கை நாணயமானதாக இருந்திடின், பட்டீல் இப்படியா பேசியிருப்பார்?

ஆமாம்! நண்பர்களே! பாங்க்குகளைத் தனியாரிடம் விட்டுவைப்பதாலே, நாட்டின் வளர்ச்சி, மக்களின் வாழ்வு குலைகிறது. பாங்க்குகள் முதலாளிகளின் ஆதிக்க வளர்ச்சிக்கே இயங்கி வருகின்றன. ஆகவே நாட்டு நலனைக் கருதி பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கிடக் காங்கிரஸ் முடிவெடுத்திருக்கிறது—என்றல்லவா பேசியிருப்பார்?

அந்தவிதமான பேச்சை சந்து முனையில் சத்தம் எழுப்புவோருக்கு விட்டு விட்டார்!

முதலாளிகளின் மனம் குளிரும் பேச்சை பட்டீல் பேசுகிறார்.

பட்டீல்தானே? அவர் அப்படித்தான்!—என்று கூறுவரோ! கூறிடின், கேள் தம்பி! பட்டீல் பேசியது தவறு! பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கத்தான் போகிறோம் என்று இந்திரா அம்மையார் அறிக்கை விடத் தயாரா என்று! பாராளுமன்றத்தில், பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்குவதற்கான சட்டம் கொண்டு வரச் சம்மதமா, கேளேன்!

பட்டீல், மேலும் உடைக்கிறார், குட்டுகளை.

அச்சம் வேண்டாம் என்று சொன்னால் மட்டும் போதாது; பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கிடும் நோக்கம் இல்லை என்றால் எதற்காகத் தேர்தல் அறிக்கையில் பாங்க்குகள்மீது சமுதாயக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று குறிப்பிடவேண்டும் என்று செல்வபுரியினர் கேட்பார்களே, என்று தோன்றுகிறது பட்டீலுக்கு.

அந்தக் கேள்விக்கும் சமாதானம் சொல்லிவிட வேண்டும்—(இது அக்டோபர்—பிப்ரவரியில் பொதுத் தேர்தல்—) என்ற நினைவு உறுத்துகிறது.

ஆகவே அவர், வெளிப்படையாகவே பேசுகிறார்.

> சமுதாயக் கட்டுப்பாடு என்ற சொற்றொடர் காங்கிரசின் பழைய தேர்தல் அறிக்கைகளிலேயே இருக்கிறது. அதையேதான் இந்த அறிக்கையில் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலேயே அதற்கு ஒரு புது அர்த்தம் வந்துவிடுமா? அதனுடைய தாத்பரியம் என்ன என்றால், பாங்க்குகள் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பிரம்மாண்டமான பொருளாதார அமைப்புகள். ஆகவே அவைகளிலே மிக மோசமான ஊழல் நிர்வாகமோ, பணத்தை மோசடி செய்யும் போக்கோ தலைதூக்குமானால், சர்க்கார் தலையிடும்!—என்பதுதான்.

தம்பி! எவ்வளவு தேன் தடவுகிறார் பார்த்தாயா? எவ்வளவு அக்கறை கவனித்தாயா, செல்வபுரியினரின் நேசத்தை உறுதிப்படுத்திக்கொள்ள.

> ஒப்புக்கு ஒரு வார்த்தை என்பதோடு விடவில்லை பட்டீல்! இது எப்போதும் பேசுகிற பேச்சு! இதற்கு இப்போது என்ன புதிதாகப் பொருள் வந்துவிட்டது! உங்களை யார் என்ன செய்யப் போகிறார்கள்! மோசடி நடந்தால்தானே சர்க்கார் குறுக்கிடும் என்கிறார்.

மோசடி எங்கு நடந்தாலும், தம்பி! எப்போது நடந்தாலும் குறுக்கிடும் அதிகாரம் சர்க்காருக்கு உண்டு!

சர்க்கார் என்ற அமைப்பு இருப்பதே, எந்தத் துறையிலும் மோசடி நடந்திடாமல் தடுக்கவும், மோசடி நடந்துவிட்டால் தண்டிக்கவும்தான்.

இதை தேர்தல் அறிக்கையிலே சேர்த்து, இதனைப் புரட்சித் திட்டம் என்று விளம்பரப்படுத்துவானேன்?

தம்பி! பட்டீலின் பேச்சைத்தான் படித்துப் பாரேன்.

> The expression social control was to be found in the previous Congress manifestos, and merely because it was repeated it did not acquire a new meaning. It meant that banking and insurance were institutions of such financial magnitude that it would be only in the case of gross mismanagement and misuse of funds that the government might step in

இவ்வளவு பேசியும் விளக்கம் தருகிறார், சரியாகத்தான் இருக்கிறது, ஆனால் பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்குவது என்ற திட்டதைக் கண்டிக்கக் காணோமே, ஒரு சமயம் மனதிற்குள் அந்தத் திட்டத்தை ஆதரிக்கிறாரோ என்று எங்கே முதலாளிகள் எண்ணிக்கொள்ளுவார்களோ என்று கவலைப்பட்டு பட்டீல், பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கும் திட்டமே, ஒரு கேலிக்கூத்தான திட்டம் என்று சாடியிருக்கிறார்.

> a ridiculous proposition

என்றே கூறியிருக்கிறார்.

# உனக்கும் எனக்கும் புரிந்தால் போதுமா?

தம்பி! வேருேர் நாடு தாங்கிக்கொள்ளாது இப்படிப்பட்ட போக்கினை.

ஏழைகளை மயக்க, தீவிரமான திட்டம்—ஏட்டில்!

முதலாளிகளிடம் சென்ருே, முகத்தைத் துடைத்துவிடுவது!

மிகப் பெரியவர்கள் அங்கு உள்ளவர்கள் என்பதால் முகத்தைத் துடைத்துவிடுவது என்று மட்டுமே கூறுகிறேன்.

நமது பேச்சின் தரம் கெட்டுவிடக்கூடாதே என்பதற்காக, இவர்கள் மேற்கொள்ளும் போக்குக்கு ஏற்ற வார்த்தைகளைச் சொல்லாமலிருக்கிறேன்.

திட்டம் என்று ஒன்றைக் காட்டுகிருர்கள், இது முதலாளிக் கோட்டையைத் தகர்த்திடும் வெடிகுண்டு என்று வீரம் பேசுகிருர்கள்; பிறகு அவர்களே, அது வெடிகுண்டு அல்ல, வெறும் புஸ்வாணம் என்றும் எடுத்துக் காட்டுகிருர்கள். ஏன்?

எதைச் சொன்னுலும் கேட்டுத் தீர
வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு
விட்டார்கள் என்ற நினைப்பினுலா?

இதுவா மக்களாட்சியின் மாண்பு! இந்த மோசடியா காங்கிரஸாரின் அறநெறி அரசியல்!

தம்பி! பாங்க்குக்காரர்களையும் செல்வபுரியினரையும் கூட்டிவைத்துப் பேசுகிருரே பட்டீல், பயம் வேண்டாம், உங்கள் அமைப்புகளுக்கோ ஆதிக்கத்துக்கோ ஆபத்து ஏற்படாது என்று, அவர்கள் எந்த அளவு ஆதிக்கம் இன்று செலுத்துகிருர்கள் தெரியுமா, பொருளாதாரத் துறையில், தொழில் துறையில், திடுக்கிட வைக்கத்தக்க அளவு. ஒரு கணக்குத் தருகிறேன், பார் தம்பி! பாடமும் அறிந்துகொள்.

தொழில் வளர முதல்வேண்டும்; 'முதல்' யாருடைய ஆதிக்கத்தில் இருக்கிறதோ அவர்கள் 'தொழில் உலகை'த் தம் கரத்தில் கொண்டுவரமுடியும். இதற்கு விளக்கம் தேவையில்லை. இந்தப் பொருளாதாரப் பிடிக்குப் பயன்படும் கருவிகள், பாங்க்குகள்! ஆங்கு உள்ள பணம் எவ்வளவு? பாரேன், கணக்கினை.

| 1962-ம் ஆண்டு | கோடிகள் |
|---|---|
| பம்பாயில் | 442·83 |
| டில்லி | 316·11 |
| கல்கத்தா | 289·26 |
| சென்னை | 63·09 |

பாங்க்கிகளில் சேர்க்கப்பட்டிருக்கும் 'டிபாசிட்டு' பணத்தின் அளவு.

பம்பாயில் 442-கோடி ரூபாய்; வளம்கொழித்திடும் விதமாகத் தொழில் அமைச்சர் வெங்கடராமனுல் ஆக்கப்பட்டிருக்கிறதாமே தமிழகம், அங்கு பாங்க்குகளில் உள்ள டிபாசிட்டுத் தொகை 63-கோடி

442 !
63

இடத்தின் இயல்பு ஒருபுறம் இருக்கட்டும், பிடி எவரிடம் என்பதைக் கவனிப்போம்.

தம்பி! எல்லா பாங்க்கிகளிலும் சேர்ந்துள்ள 'டிபாசிட்' தொகை, 1960-ம் ஆண்டுக் கணக்குப்படி

1550-கோடி ரூபாய்.

இந்தத் தொகையில் ஐந்தேஐந்து பாங்க்கிகளில்மட்டும்

625-கோடி ரூபாய்!

மிச்சத்தொகை நாட்டிலே உள்ள எல்லா பாங்க்குகளிலும்!

இந்த ஐந்து பாங்க்கிகள் எவை?

1. சென்ட்ரல் பாங்க்
2. பாங்க் ஆப் இந்தியா
3. யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
4. பரோடா பாங்க்
5. பஞ்சாப் நாஷனல் பாங்க்

பெயர்கள் இருக்கட்டும், நாட்டிலே திரட்டப்படும் டிபாசிட் தொகையில் கிட்டத்தட்ட பாதி—625-கோடி ரூபாயைக் கைவசம் வைத்துக்கொண்டு, அதன்மூலம் தொழில் உலகில் பிடியை அழுத்திக்கொண்டிருக்கும் இந்த ஐந்து பாங்க்கிகளின் அதிபர்கள் யார்?

சென்ட்டிரல் பாங்க், பாங்க் ஆப் இந்தியா

இவை இரண்டும் டாடா! வின் கரத்தில்!

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
பரோடா பாங்க்

இவை இரண்டும் பிர்லாவின் ஆட்சியில்!

பஞ்சாப் நாஷனல் பாங்க்

டால்மியா—ஜெயின் குடையின் கீழ்!

இவ்விதமான பொருளாதாரத்துறை ஆதிக்கத்தைத் தகர்த்திடத்தான், பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்று முற்போக்காளர் வலியுறுத்துவது.

1962ம் ஆண்டு, நமது கழகத் தேர்தல் அறிக்கையிலேயே, நாம் இதனை ஆதரித்திருக்கிருேம்.

காங்கிரஸ் அரசும் கட்சியும் இந்த முதலாளிகளுக்குக் கட்டியம் கூறிக்கொண்டும் மக்களிடம் மயக்கமொழி பேசிக்கொண்டும் வருகிறது.

பாங்க்குகளை சமுதாயக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் போகிருேம் என்ற பேச்சு, இப்போது யோசித்துப்பார் தம்பி! கதையிலே சீமான் சொல்கிருனே, எல்லாச் சொத்தும் தருமததுக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று, அது போன்ற விந்தைப் பேச்சா, வேறு?

உனக்கும் எனக்கும் புரிந்திருக்கிறது. பயன்? நாட்டுக்கல்லவா புரியவேண்டும்!

அண்ணன்,

அண்ணாதுரை

# சிவப்புக் காவலர்

செஞ்சீனத்தின் சிவப்புக் காவலர்கள், அண்மைக் காலத்தில் உலகப் பத்திரிகைகளின் பத்திகளை நிரப்பிச் செய்தியாகி வருகிறார்கள்!

'கலாச்சாரப் புரட்சி' என்ற பேரில் அந்தச் சிவப்புக் காவலரின் வெறியாட்டத்துக்குப் பலியாகி வரும் பெருமக்கள்—முன்னணியினரின் பட்டியல், நாளுக்கு நாள் நீண்டுகொண்டே இருக்கிறது!

குழி வெட்டத் தொடங்கினார்கள்—சீனத் தலைவர்கள்; ஆனால், அங்கிருந்து பூதம் புறப்பட்டது! தங்கள் கையை வலுப்படுத்த ஊட்டி வளர்த்தார்கள் — சிவப்புக் காவலர்களை! வளர்த்தகடா மார்பில் பாய்கிறது!

'கலாச்சாரப் புரட்சி' என்று இவர்கள் எதைச்சொல்லுகிறார்கள் என்பது அவர்களுக்கும் புரியவில்லை-உலகத்துக்கும் புரியவில்லை! சிவப்புக் காவலர்களின் ஒரு அணிக்குப் பிற்போக்குவாதிகளாகப் படுகிறவர்களை, 'புரட்சியின் மூலகர்த்தாக்கள்' என்று இன்னொரு அணி சொல்லுகிறது.

'யார் பிற்போக்குவாதி —யார் புரட்சிக்காரர் என்ற வாதத்தில், சிவப்புக் காவலர் அணிகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதால், சீனத்துத் தெருக்களில் இரத்தம் வழிந்தோடுகிறது!

சீன அதிபர் 'மா'வும், அவரது நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமான பாதுகாப்பு அமைச்சர் லின் பியாவோவும், 'பிறபோக்குவாதிகளை இனம் காட்டுவது' என்ற பேரால், இந்த இளைஞர்அணிக்குத் தங்கள் ஆதரவைத் தந்தார்கள்!

இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்க முயலுகிறார்கள் இந்த இளைஞர்கள்! பீகிங்கிலிருந்து கலாச்சாரப் புரட்சிக்காக ஷசாங் நகரத்துக்குச் சென்ற சிவப்புக் காவலர் அணியைச் சேர்ந்த ஓர் இளைஞன், கட்சித் தலைவர் — சீன அதிபர் 'மா'வின் பிறப்பு வளர்ப்பையே ஆராய ஆரம்பித்திருக்கிறான்!

"தலைவர் 'மா'வை, உழவர்குடிப் பிறந்தவர் என்கிறார்கள்; உண்மைதான்; ஆனால், அவர் ஏழை உழவரல்லர்; பெருநிலக்கிழார் வம்சத்தைச் சேர்ந்தவர். எனவே, அவரும் பிற்போக்குவாதியே" என்றானாம்!

இன்னொரு மாணவ இளைஞன், இந்த இளைஞர்பட்டாளம் துவங்கக் காரணமாக இருந்த 'லின்பியாவோ கூட பிற்போக்குவாதிதான்' என்று பேசியிருக்கிறான்!

அனைத்துலக மட்டத்தில் கொள்கை அளவில் சீனத் தலைவர்கள் எப்படிக் குழம்பிக் கிடக்கிறார்களோ — அப்படியேதான், அவர்களின் சீடர்களான இந்தச்சிவப்புக் காவலர்களும் இருக்கிறார்கள்!

சிலைகளை உடைப்பது — பள்ளிக்கூடங்களைக் கொளுத்துவது — தலைவர்களைத் தாக்குவது — அவர்கள் குடும்பங்களைச் சூறையாடுவது —பழைய புத்தகக் கடைகளுக்குத் தீ மூட்டுவது—மேற்கத்திய பாணியில் உடையணிந்தவர்களை அவமானப்படுத்துவது—இவைதான் கலாச்சாரப் புரட்சி என்றால் — 'இவற்றின்மூலம் பழைமை எண்ணத்தை மாற்றவிட முடியும்; புதுமை எண்ணங்களை மக்கள் மனத்தில் மலரவைக்க முடியும்' என்றால் — அவர்களைவிடப் பைத்தியக்கார முட்டாள்கள் யாரும் இருக்கமாட்டார்கள்!

மக்களுக்கு எண்ணப் புரட்சி ஏற்படுத்துவதுதான் முறையே தவிர — அதற்கு அமைதியான பிரசாரம்தான் சிறந்ததே தவிர, இப்படி வன்முறைகளைக் கையாளுவதால் எள்ளளவும் பயனில்லை!

இந்த நேரத்திலேதான் நமக்குத் தமிழகத்தைப்பற்றி நினைக்கத்தோன்றுகிறது! இந்தியத் துணைக்கண்டத்திலேயே எல்லா வகையிலும் பிற்பட்ட மாநிலமாக இருந்த தமிழகம், இன்று சிறந்த அரசியல் விழிப்புணர்ச்சி பெற்று வழிகாட்டும் மாநிலமாக இருக்கிறது என்றால், அதற்கு அலுக்காமல் சலிக்காமல் அண்ணா அவர்கள் கையாண்ட அமைதியான பிரசாரம்தான் காரணம்!

சீன இளைஞர்கள் செய்கிற காரியங்களைச் சீன மக்களே வெறுக்கிற நிலை வளர்ந்துவிட்டது!

பீகிங் நகரத்து ஆலைத் தொழிலாளிகள் இந்த அட்டகாசங்களை எதிர்த்து மறியல் செய்திருக்கிறார்கள்! பொதுமக்களைப் பங்கப்படுத்தும் வகையில் அவர்கள் நடந்து கொள்ளும்போது, பொதுமக்களே இந்த இளைஞர்களைச் செம்மையாகத் தாக்கியிருக்கிறார்கள்!

உள்நாட்டிலேயே இந்தச் சிவப்புக்காவலர்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை!

இதன்மூலம், வெளிநாட்டில் கொஞ்சநஞ்சம் இருந்த உறவையும் நல்லெண்ணத்தையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள் சீனத் தலைவர்கள்!

சோவியத் இரஷ்யாவின் 'இஸ்வெஸ்தியா', சிவப்புக் காவலர் செயல்களைக்கண்டிக்கிறது! சோவியத் வார இதழ் 'நியூடைம்ஸ்' கண்டிக்கிறது! செக்கோஸ்லோவேகியாவின் 'ட்ரேஸ்' என்ற இதழ் வன்மையாகக் கண்டித்திருக்கிறது!

யூகோஸ்லோவியாவின் செய்தி நிறுவனம் 'டாஞ்சுக்' பல செய்திகளை அம்பலப்படுத்தி சீனாவைக் கண்டித்தது!

கியூபா நாட்டின் 'கிரான்மா' பத்திரிகை, சீனத் தலைவர்களை வெளுத்துவாங்கியிருக்கிறது.

போலந்துநாட்டுப் பத்திரிகைகள் கண்டித்து எழுதிவிட்டன.

கம்யூனிசத்தில் நம்பிக்கைஉள்ள இந்த நாடுகளின் நிலையே இது என்றால், மற்ற நாடுகளைப்பற்றி என்ன சொல்ல?

சீனத்துக்கு உள்ளும் புறமும் இப்படித்தொல்லைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற செஞ்சீனத்துச் சிவப்புக் காவலர்களை சீனத்தலைவர்களால் அடக்கிட முடியவில்லையாம்!

மறுமலர்ச்சி தேவைதான்—மக்களைப் பலிகொடுத்து அல்ல! எண்ணங்களில் மாற்றம் தேவைதான் — அதற்காக இதயங்களை இழந்துவிட வேண்டியதில்லை!

செஞ்சீனத்து நிலைமைகளைப் புரிந்துகொண்ட பிறகாவது — அதேபோல் இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்காங்கே நிலவிடும வெறிப்போக்கைக் கண்டபிறகாவது...... அண்ணா அவர்களின் அரசியல் அறவழியை இங்கே உள்ளவர்கள் புரிந்துகொள்வார்களானால், வருங்காலம் அவர்களைப் பழிக்காமலாவதுஇருக்கும்! —முத்து.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.